**தலைப்பு 291 - கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 291 – கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 செப்தம்பர் 13 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 2,114.60 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,598.40 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 516.20 மில்லியன் அதாவது 24.41 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 203.80 | 197.34 | 6.46 | 3.17 |
| மூலதனம் | 1,910.80 | 1,401.06 | 509.74 | 26.68 |
| மொத்தம் | **2,114.60** | **1,598.40** | **516.20** | **24.41** |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 10.88 | 10.21 | 8.38 | 10.01 | 50.00 | 34.42 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0091/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 1.84 மில்லியனாக காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 04 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 24.26 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0001/0024/000 | 7.26 |
| 6000/0000/00/0016/0057/000 | 13.73 |
| 6000/0000/00/0002/0110/000 | 2.27 |
| 6000/0000/00/0013/0092/000 | 1.00 |
| மொத்தம் | **24.26** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை**

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை. |
| (ஆ) | கணனி, துணைக் கருவிகள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (இ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ஈ) | அடியிதழ்சேர் பதிவேடு | நிதிப்பிரமாணம் 341 |
| (உ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) |
| (ஊ) | மின் பொருத்திகள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 751(2) |

| | | |
|---|---|---|
| (எ) | கடமை தொலைபேசி பதிவேடு | நிதிப்பிரமாணம் 845(1) |
| (ஏ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) |
| (ஐ) | வாகனங்கள் பட்டியல்படுத்தப்பட்ட பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647 |

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

29101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,106,630 ஆகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை கடன் மீதிகள் 04 மாதங்கள் முதல் 18 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து காணப்பட்டு வந்த போதிலும் அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் பேரேட்டின் தனிப்பட்ட கடன் மீதி 2015 சனவரி 01 இல் உள்ளவாறு கடன் பேரேட்டில் முன்கொண்டு வரப்பட்ட மீதிகளுக்கிடையே வேறுபாடு ரூபா 1,417 ஆக இருந்தது.

(இ) இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 150,933 தொகையான கடன், இடமாற்றம் பெற்றுச்சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதியில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் இடமாற்றம் பெற்றுவந்த இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 15,000 தொகையான கடன் மீதிகள் இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) திணைக்களத்தின் உத்தியோகத்தரொருவர் 2011 செப்தம்பர் 21 ஆந் திகதி முதல் ஒக்தோபர் 17 ஆந் திகதி வரை சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்ததுடன் 2014 செப்தம்பர் 26 ஆந் திகதி முதல் 2015 பெப்ரவரி 04 ஆந் திகதி வரை சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை. இச்சேவைக்கு அறிக்கையிடாத காலப்பகுதி எந்தவொரு அடிப்படையொன்றுமில்லாமல் விடுமுறையாக கருதி சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அந்த உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 3.21 ஆம் பிரிவின் பிரகாரம் கடன்தொகையை மீளச் செலுத்தாத உத்தியோகத்தரொருவருக்கு இன்னொரு கடன்தொகையொன்றைப் பெற்றுக்கொள்ளும் உரித்தொன்று இல்லாத போதிலும், அது தொடர்பாக கருத்திற்கொள்ளாமல் 2015 யூன் 22 ஆந் திகதி ரூபா 105,586 தொகையான இடர் கடன்தொகையும் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

கொழும்புத் துறைமுக நகர் அபிவிருத்தி திட்டத்திற்காக ''மேலதிக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை'' தயாரித்தல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 208,331 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அச்செயற்பாடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்**

கீழே விபரிக்கப்பட்டவாறு சில சொத்துக்கள் விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | மடிக் கணனிகள் | 02 | 212,000 | 10 மாதங்கள் |
| (ii) | கோண அளவீட்டு உபகரணங்கள் 1600 | 01 | G.T.Z செயற்திட்டத்திலிருந்து கிடைத்தது | 10 வருடங்கள் 08 மாதங்கள் |
| (iii) | கோண அளவீட்டு உபகரணங்கள் 212 | 01 | 163,000 | 02 வருடங்கள் 03 மாதங்கள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஒக்தோபர் 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்அறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வறிக்கை 2016 செப்தம்பர் 13 ஆந் திகதி வரையிலும்

கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2014 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

(ii) 2014 இற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் மற்றும் செய்யப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 760 முதல் 767 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

திணைக்களத்தின் நீர்கொழும்பு பிரதேச அலுவலகத்திற்கு கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 7,800,000 நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியின் உரித்து திணைக்களத்தினால் உறுதிப்படுத்தியிருக்காத போதிலும், அக்கட்டிடத்தின் திட்டம் மற்றும் மண் பரிசோதனைக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,183,087 செலவிடப்பட்டிருந்தது.

## 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை<br>1988 இன் 64 ஆம் இலக்கம் மற்றும் 2011 இன் 49 ஆம் இலக்கம் என்பவற்றின் மூலம் திருத்தம் செய்யப்பட்ட 1981 இன் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் அதிகாரச்சட்டம் | | |
| • 9(2), 12(1), 12(11) மற்றும் 12(5) ஆம் பிரிவுகள் | -- | பணிப்பாளர் நாயகத்தினால் கரையோர வலயத்தில் அனைத்து வளங்கள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்ட கரையோர வலயம் மற்றும் கரையோர வளங்களை முகாமைத்துவம் செய்யும் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே அதனை செயற்படுத்தும் திகதியிலிருந்து 05 |

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டு காலப்பகுதியிலும் திட்டத்தின் ஒவ்வொரு திருத்தமும் மேற் கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 5 ஆண்டு காலத்தில் திட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்ததது. திணைக்களத்தினால் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 1997 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்பட்ட கரையோர வலயம் மற்றும் கரையோர வளங்களை முகாமைத்துவம் செய்யும் திட்டமே செயற்படுத்தப்படுகின்றது. |
| • | 31(1),(2) ஆம் பிரிவு | -- | அனுமதியற்ற நிர்மாணமொன்று மேற்கொள்ளக்கூடாத போதிலும், அவ்வாறான நிர்மாணமொன்று ஏதேனும் காலப்பகுதியில் அகற்றப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இனங்காணப்பட்ட 896 அனுமதியற்ற நிர்மாணங்களில் 55 நிர்மாணங்கள் அதாவது 6 வீதம் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தன. |
| • | 31(3) அம் பிரிவு | 2,197,500 | கரையோரம் பேணல் பரிசில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்நிதியத்தில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசு மீதி ரூபா 2,197,500 ஆக இருந்ததுடன் நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டு வரும் பணம் மற்றும் செலவினங்கள் செயய்யப்பட்ட பணம் தொடர்பாக முறையான கணக்கு வைப்பு பேணப்படாமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. |
| • | 31(4) ஆம் பிரிவு | 12,232,446 | திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உடைத்து அகற்றப்பட்ட நிர்மாணங்களுக்காக திணைக்களம் செலவிடப்பட்ட ரூபா 12,232,446 தொகையை உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்
-----------------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104(1) | -- | 2015 ஆம் ஆண்டில் இடம்பெற்ற 07 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 109 மற்றும் 113 | 35,355 | நட்டங்களாக அறிக்கை இடப்பட்டிருந்த ரூபா 35,355 தொகையான நட்டங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 747(1) | -- | திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் திருத்த நடவடிக்கைகளின் போது அகற்றப்பட்ட உபகரணங்கள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு 2015 மார்ச் 26 ஆந் திகதி ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப் பிரமாணம் 753(2) | -- | களஞ்சியத்திற்கு கிடைக்கப்பெறும் அனைத்துப் பொருட்களுக்காகவும் பொது 219 பொது மாதிரியில் பெறுவனவு கட்டளை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப் பிரமாணம் 1645 | 96,000 | தலைமைக் கணக்காளருக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் கணக்கீட்டு பிரிவின் கடமைகளுக்காக பயன்படுத்து வதற்காக மாதாந்தம் ரூபா 8,000 வீதம் எரிபொருள் முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், அது மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றிக்கை
---------------------------------

| | | |
|---|---|---|
| 2007 செப்தம்பர் 11 ஆந் திகதிய 21/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | -- | நாட்டிலிருந்து வெளியேறுவதற்காக பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய பிரதமரின் அனுமதியை திணைக்களத்தின் 09 உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| 2004 சனவரி 05 ஆந் திகதிய ஈஆர்டீ/சீஜஆர்/01/3(1) சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி | -- | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் IFAD செயற்திட்டத்தின் கீழ் வெளிநாட்டுப் பயிற்சிகளைப் பெற்றிருந்த 06 உத்தியோகத்தர்களால் திணைக்களத்திற்கும் உரிய வெளிநாட்டு அனுசரணை யாளருக்கும் வெளிநாட்டுப் பயிற்சி தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருக்கவில்லை. |

### 3.6 செயலாற்றல்

2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

**(அ) போதியளவில நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

மாரவில – தல்வில கடற்கரை 2013 ஆம் ஆண்டின் போது ஆழ்கடலிலிருந்து மணலை எடுத்து செயற்கை கடற்கரை அமைக்கப்பட்டிருந்தது. மீண்டும் அப்பிரதேசம் கடும் அரிக்குட்பட்ட காரணத்தினால் 2015 ஆம் ஆண்டின் போதும் இரண்டாம் கட்டத்தின் கீழ் கடலிலிருந்து மணலை எடுத்து செயற்கை கரையொன்று அமைக்கும் செயற்பாடு செயற்படுத்தப்பட்டிருந்தது. 2015 செப்தம்பர் 18 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 12/2015 அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்காக 2015 ஒக்தோபர் 25 ஆந் திகதிய பீஎப்டீ/ஏஎஸ்டீ/சீஎம்/326 ஆம் இலக்க நிதி அமைச்சரின் கடிதத்தன் பிரகாரம் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தன.

(i) மணல் மீண்டும் கடலுக்கு அடித்துச் செல்லும் நிலைமை காணப்படுவதால் அரித்துச் செல்லும் கரையை போசிப்பதற்காக நிரந்த தீர்வொன்றை உரிய தரப்புடன் இணைந்து வழங்குதல்.

(ii) அதற்காக பொருத்தமான உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்றின் மூலம் தொழில்நுட்ப அறிக்கையொன்றை அமைச்சரவையின் கருத்திற்காக சமர்ப்பித்தல்.

இதற்காக நியமிக்கப்பட்ட 08 உத்தியோகத்தர்களுடனான குழுவின் அறிக்கை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படாமை**

கீழே காட்டப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டில் ரூபா 107,000,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அச்செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் திட்டமிடப்பட்டிருந்ததன் பிரகாரம் அச்செயற்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்றிட்டம் | மதிப்பிடப்பட்ட தொகை |
|---|---|
| | ரூபா |
| முத்துபன்னிய/ நகுலெலிய | 15,000,000 |
| துன்கல்பிட்டிய ரஜவெல கிரொய்ன் | 30,000,000 |
| கஹவ கிரொய்ன் | 30,000,000 |
| தெல்வல கிரொய்ன் | 30,000.000 |
| கொக்கல களப்பு | 2,000,000 |
| மொத்தம் | **107,000,000** |

**(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் போதியளவில் காணப்படாமை**

2015 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பின்வரும் செயற்றிட்டங்களின் பௌதீக செயன்முன்னேற்றம் 5 சதவீதத்திலிருந்து 47 சதவீதம் வரையான அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன.

| செயற்பாடு | இலக்கு | | பௌதீக முன்னேற்றம் | |
|---|---|---|---|---|
| | நிதி | சதவீதம் | நிதி | சதவீதம் |
| | ரூபா | | ரூபா | |
| கட்டிடங்கள் | 7,800,000 | 100 | 2,183,000 | 30 |
| கரையோர கணிப்பீடு மற்றும் கரையோர அபிவிருத்தி | 8,500,000 | 100 | 3,373,000 | 47 |
| பயாகல அலைதாங்கி | 45,000,000 | 100 | 22,378,000 | 40 |
| வெலிகம கரையோர பூங்கா | 25,000,000 | 100 | 13,800,000 | 5 |
| மாரவில அலைதாங்கி மீளமைப்பு | 8,000,000 | 100 | 1,008,000 | 5 |
| அக்குரல கற்சுவர் | 20,000,000 | 100 | 15,606,000 | 40 |
| பண்டாரமுல்ல ஒழுங்கை ரிட்ச்மன்ட் | 10,000,000 | 100 | 1,066,000 | 40 |

## 3.7 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) உணவட்டுன மணல் போசிப்பு செயற்திட்டத்திற்காக திணைக்களம் மற்றும் ஒப்பந்தக்காரருக்கிடையே 2014 திசெம்பர் 04 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 5,187,000 யூரோக்களுக்கு 200,000 கன மீற்றர் மணலை எடுப்பதற்கு இணக்கம் காணப்பட்டிருந்தது. வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக வழங்கப்பட்ட திகதியற்ற பொறியலாளர் சான்றிதழின் பிரகாரம் உடன்படிக்கை பிரகாரம் செயற்பாடு நிறைவேற்றப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. 2015 மே 11 ஆந் திகதிய ஒப்பந்தக்காரரின் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள மணலின் அளவு கணிப்பீடு தவறானதெனவும் வழங்கப்பட்ட மணல் 214,070 கனமீற்றர் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. திணைக்களம் மற்றும் ஒப்பந்தக்காரருடன் அளவீட்டை பெறாமல் ஒப்பந்தக்காரர் சுட்டிக்காட்டி கூடுதலாக வழங்கப்பட்ட 14,070 கனமீற்றர் சரியாதென முதலாவது சான்றிதழ் வழங்கிய பொறியலாளரினாலேயே மீண்டும் சான்றுறுதிப்படுத்தியிருந்ததுடன், அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ஏற்பட்ட நட்டம் ரூபா 20,099,135 ஆக இருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 66,929,783 செலவு செய்து 200 மீற்றர் நீளமான உணவட்டுன அலை தாங்கியை நிர்மாணிப்பதற்கு முன்னர் எந்தவொரு சுற்றாடல் தாக்க மதிப்பீடோ விஞ்ஞான ரீதியான ஆய்வொன்றோ மேற்கொள்ளப்படாமல் அலைதாங்கி நிர்மாணிக்கப்பட்டதால் அந்நிர்மாணத்தின் பின்னர் அதற்கு அண்மித்த கரையோரத்தில் ஏற்பட்ட கடலரிப்பு நிலைமைக்கு தீர்வொன்றாக அலைதாங்கியின் 100 மீற்றர் அளவினை உடைத்து அகற்றுவதற்கு அதற்காக நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அலைதாங்கியை உடைப்பதற்கு மாத்திரம் விஞ்ஞான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவ்வாறான ஆய்வொன்றை அந்நிர்மாணத்திற்கு முன்னர் மேற்கொண்டிருந்தால் இந்த அலைதாங்கியை உடைப்பதற்காக 2016 மார்ச் 29 ஆந் திகதி வரை செலவிடப்பட்ட ரூபா 37,376,842 தொகையினை திணைக்களத்திற்கு சேமிக்க முடியுமாக இருந்திருக்கும். இந்த அலைதாங்கியின் அகற்றப்பட்ட பகுதியின் நிர்மாணம், அப்பகுதியை மீண்டும் அகற்றுதல் மற்றும் தாமதக் கட்டணங்கள் கழிப்பனவுகள் அறவிடப்பட்டமையால் திணைக்களத்திற்கு ரூபா 71,487,484 ஆன நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.8 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காட்டப்பட்ட பற்றாக்குறைகள் சம்பந்தமாக திணைக்களத்தினால் சரிசெய்யப்படாத பந்திகளுக்கான தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புபட்ட விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (i) | 2013 | 1.6(அ)(i) | 326 அனுமதியற்ற நிர்மாணங்களை உடைத்து அகற்றும் கட்டளைகள் விநியோகிப்பதற்காக ரூபா 5,991,496 செலவிடப்பட்டிருந்த போதிலும், எவ்வித அகற்றலும் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) | 2013 | 1.7(ஆ) | செயற்திட்டத்தை நிறைவேற்றுவதின் தாமதத்தினால் இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் கறுப்பு பட்டியலில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2013 | 1.10(ஆ) | திணைக்களத்திற்குச் சொத்துக்களை கையளிக்கும் போது முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமையால் ஏற்பட்ட ரூபா 4,092,264 தொகையான நட்டம் தொடர்பாக முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 2013 | 1.13(அ) | கெபுன்கொடை அலைதாங்கியினால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாத முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையால் மற்றும் அதன் பகுதியொன்று உடைத்து அகற்றப்பட்டதால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட ரூபா 25,781,265 நட்டம் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 2014 | 3.12 | உடைத்து அகற்றும் கட்டளையொன்று வழங்கப்பட்டதன் பின்னர் செயற்பாட்டிற்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்குதல் மற்றும் அதற்காக மீண்டும் ஒருமுறை வழங்கப்பட்ட உடைத்து அகற்றல் கட்டளையின் பிரகாரம் முழுக் கட்டிடமும் அகற்றப்பட வேண்டியிருந்த போதிலும் 04 மாடிகளுடன் கூடிய அக்கட்டிடத்தின் 02 மாடிகள் மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தது. |
| (vi) | 2014 | 3.14(ஆ) | தொழில்நுட்ப மதிப்பாய்வு அறிக்கையின் பிரகாரம் கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட கம்பனியை கருத்திற் கொள்ளாமல் இரண்டாவது குறைந்த விலை சமர்ப்பித்த கம்பனிக்கு ஒப்பந்தத்தை வழங்கியமையால் திணைக்களத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 89,831,536 ஆக இருந்தது. |
| (vii) | 2014 | 3.14(ஈ) | அலைதாங்கி நிர்மாணம் மற்றும் மணல் குவிப்பு ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக்காரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் காலத்திற்கு இணங்க வேலை செய்யப்படாமையால் ரூபா 11,488,276 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

**3.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 38 | 25 | 13 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 331 | 237 | 94 |
| (iv) | ஆரம்ப நிலை | 174 | 112 | 62 |
| | மொத்தம் | **547** | **375** | **172** |